**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4702

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.11.2021

Accepted: 25.12.2021

Published: 01.01.2022

Citation:
Ariyanacheyammal, S. "The Dominance of the Male and the Depression of the Female That Emerge through Madalayrudhal – Via Kuruntokai." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 261–67.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4702

*Corresponding Author:
ariyanacheyammal@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Dominance of the Male and the Depression of the Female that Emerge through Madalayrudhal – Via Kuruntokai

**S. Ariyanacheyammal**
*Ph.D Scholar (Part Time)*
*P.K.R.Arts College For Women(Autonomous)*
*Gobicettipalayam, Erode, India*
http://orcid.org/0000-0003-2085-847X

**Abstract** - Masculine songs can be used to find out the status of a woman. Although women's claims are more prevalent, feminist claims are more central to men. The Sangam period society may have been a male-centric society. The man's statements occur by knowing the woman's psychology. In the name of Madalayrudhal women are affected indirectly in psychological way. The way of the process of flirting indirectly affects the mind of the woman. The woman's mind gets changed when looking at this, so that the man can lead his life well. The event in which man's life seeks to renounce its possessions is self-inflicted. After the fulfilment of man's intentionIt is set up to explore how events and scenarios are set up that depends on the leader's intent. . The event in which life seeks to renounce its possessions is self-contradiction. It is set up to explore how events and scenarios are shaped by the leader's intentions.

**Keywords:** Sangam Literature, Kuruntokai, Psychology of Man, Madalayrudhal, Mutational Psychology

**References**

1. Kuruntokai Mulamum Uraium – Scriptwriter- Dr V.Nagrajan, New Century Book House – Chennai -98.
2. Thirukkural Mulamum Manakkudaivur Uraium – Poompuhar Pathippagam – Chennai .
3. Sigmund Freud Ulappaguppaaivu Ariviyal – Author –Dr.T.K. Ravichandran – Alaigal Veliyeetagam – Chennai .
4. Tholkkapiyam Vilakkaurai – Scriptwriter –S.V. Subramaniyan – Manivasagar Pathippagam, Chennai.

# மடலேறுதல் வழியாக வெளிப்படும் ஆணின் மேலாதிக்கப் போக்கும் பெண்ணின் மனவருத்தமும் – குறுந்தொகைப் பாடல் வழியாக

*எஸ். அரியநாச்சியம்மாள்*
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோபிசெட்டிபாளையம்

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் கருவூலமாகத் திகழ்கின்றது. இலக்கியங்கள் வழி வாழ்வியலைத் தெளிவாக அறிந்துக் கொள்ளமுடியும். வாழ்வியல் என்பது மனிதனின் அன்றாட செயல்பாடுகளின் விழைவு ஆகும். தலைவன், தலைவி, தோழி, பாகன் போன்ற கதாபாத்திரங்கள் இன்றளவும் அன்றாட வாழ்க்கையில் இடம்பெறக் கூடியவையாக அமைகின்றன. தலைவியின் மனஉணர்வுகள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலைவனின் ஊடல் மற்றும் கூடல் ஆகியவை வெளிப்படையாகக் காட்டப்பெற்றுள்ளன. தலைவனின் கூற்றுகள் பெருமளவும் தலைவியின் தேடல் சார்ந்தே அமைகின்றது. தலைவனின் உயரிய எண்ணம் தலைவியைக் கூட வேண்டும், தலைவியின் ஊடல் தணிக்க வேண்டும், தலைவியை பாநலம் பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டதே ஆகும்.

## ஆய்வு நோக்கங்கள்

ஆண் மடலேறுதல் வழியாக பிறழ்நிலை மனப்போக்கில் செயல்படுகின்றான் என்பதை ஆணின் கூற்று வழி விளக்குவதாக அமைகின்றது. குறுந்தொகை தலைவன் கூற்றுப்பாடல்கள் வழியாக ஆய்வதே ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வுச் சிக்கல்

தலைவனின் கூற்று வழியாக வெளிப்படும் பெண்ணின் உடலியல் சார்ந்த கருத்துக்கள், ஆணின் மேலாதிக்கப் போக்கை வெளிக்காட்டுகின்றன என்ற கருத்தாக்கத்தை முன்னிறுத்தி ஆய்வுச் சிக்கல் அமைகின்றது. குறிஞ்சித்திணை தலைவன் பாடல்கள் வழியாக அறியலாகும் கருத்துக்கள் இங்கே ஆராயக்கூடியவை ஆகும்.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு விளக்கமுறை, பகுப்பு முறை அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உளப் பாகுப்பாய்வு அணுகுமுறையும் முதன்மை அணுகுமுறையாக மேற்கொள்ளப்படுகின்றது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மடலேறுதல்

தலைவனின் சாவு இச்சையின் ஒருபுறம் "மடலேறுதல்" என்ற செயல்பாடுகளைக் கையில் எடுப்பான். மடலேறுதல் என்பது "தலைவன் தன் காதல் நிறைவேறாத பொழுது அத்தலைவியை எங்ஙனமேனும் அடைந்தே தீருவேன் என்ற தனது நோக்கினை வலிய நிறைவேற்ற எடுக்கும்

முயற்சியே "மடலேறுதல்" ஆகும். இதன்வழி தன் காதலை ஊரார்க்குப் புலப்படுத்தும் தலைவனின் உள்நோக்கமும் நிறைவேறும். மடலேறுதல் என்பது காமம் மிகுதியால் தலைவன் அறவழி குணம் உடையவனாய்த் திகழும் போது நிகழும் என்பது புலனாகின்றது.

**"ஏறியமடல் திறன்"**[1] என்று பெருந்திணைக்குரியதாக மடலேறுதல் திகழ்கின்றது. பெருந்திணையாவது மடல்மாக் கூறுதலும் அமையாது. மடலேறுதலும், தலைவி தலைவனுக்கு இளையவளாகாது, ஒத்த பருவத்தினளாதலும், அறவழி குணம் உடையனாதலும், காமம் மிகுதியானே எதிர்பட்டுழி வலிதிற் புணர்தலும் ஆகிய அன்புநெறியின் வழீஇய காமக்காமம்" என்று உரையாசிரியர்கள் பெரும்திணையாவது பொருந்தாக் காமம் ஆகும்.

## மடல் விளக்கம்

தலைவன் தன் காதல் நிறை வேறாத வழி எவ்வாறெனினும் தலைவியை அடைய வேண்டி முற்றிய பனைமடலால் குதிரை செய்து, அதற்கு ஆவாரம் பூச்சூட்டி தான் என்பு மாலை, வெள்ளெருக்கம் பூ சூட்டி தலைவி படத்தை வரைந்து, அதைத் தன்கையில் தாங்கி மணிகள் ஒலிக்க மடல்மாவில் ஏறிவருதல் "மடலேறுதல்" ஆகும். மடலேறுதல் கருத்துக்களை நோக்கும் போது அவை தன் இயல்பு நிலையிலிருந்து மாறுபட்ட மனநிலையில் செயல்படும் நிகழ்ச்சிகளாகவே உள்ளன. மாறுபட்ட உளநிலைகளின் அடிப்படையில் மடலேறுதல் மனமுறிவு, உள்ளப்போராட்டம், ஏமாற்றத்தை ஈடு செய்தல் என்ற நிலைகளில் நிகழ்கின்றது.

## தொல்காப்பியர் சுட்டும் மடல்

தொல்காப்பியத்தில் மடலேறுதல் பெருந்திணைக்குரியதாகக் கருதப்படுகின்றது.

**"ஏறிய மடல்திறம் இளமைதீர் திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக்**
**குறிப்பே"**[2]

ஆயினும் தலைவனின் கூற்று நிகழும் இடங்களையும் காதல் மிகுதியினால் ஆற்றாத தலைவனது இயல்பினையும் குறிப்பிடும் போது

**"மடல்மா கூறும் இடனுமார் உண்டே"**[3] என்று தலைவனுக்கு உரிய இயல்புகளுள் ஒன்றாகவும் குறிப்பிடுகிறார். ஏறிய மடல் திறம் என்று மடல் ஏறியதாகக் குறிப்பிட்டால், அது பெருந்திணைக்குரியது எனலாம். மடல் ஏறுவேன் என்று கூறி மடல் ஏறும் நிகழ்வு நடைபெறாது இருந்தால், அது ஐந்திணைக்குரியது என்று கொள்ளலாம்.

## சங்க இலக்கியத்தில் மடலேறுதல் குறித்தப் பாடல்கள்

சங்க இலக்கியத்தில் குறுந்தொகையில் 14, 17, 32, 173, 182 ஐந்து பாடல்களிலும், நற்றிணையில் 146, 152, 220, 342, 377 ஐந்து பாடல்ககளிலும் மடல் பற்றிய கருத்துக்கள் இடம்பெறுகின்றன. கலித்தொகையில் 58, 61, 138, 139, 140, 141 ஆறு பாடல்களுமென மொத்தம் 16 பாடல்கள் இடம்பெறுகின்றன.

## மடலேறுவதற்கான சூழல்

தொல்காப்பியர் தலைவனுக்குரிய பண்புகளாகச் சுட்டிச் சொல்லும்போது தலைவனின் பண்புகளைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"**[4] என்று குறிப்பிடுகின்றார். இதற்கு இளம்பூரணார் உரை எழுதும் போது பெருமையானது பழியும் பாவமும் அஞ்சுதல். உரன் என்பது அறிவு என்று விளக்கம் தருகின்றார். இத்தகையச் சிறப்புடைய தலைவன் எத்தகைய சூழலில் மடலேறுவான் என ஆராய வேண்டியுள்ளது. தலைவன் தன் குறை மறுக்கப்பட்ட சூழலிலும், தன்னை

விரும்பாத பெண்ணை அடைய முற்படும் போதும் தலைவன் மடலேறத் துணிவான். திருக்குறள் வழி மடல் குறித்த கருத்து

**“நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்”[5]**

நாணத்தையும் நல்ல ஆண்மையையும் முன்னர்ப் பெற்றிருந்தேன். இப்பொழுதோ பிரிவுத்துயரால் காமநோய் மிகுந்தவர் ஏறும் மடலையே பெற்றுள்ளேன் என்று திருவள்ளுவர் விளக்கம் அளிக்கின்றார். மேலும் காமவலி போக மடலேறுதல் ஒருவகையானத் தீர்வு என

**“காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை”[6]**

என்ற குறள் வழி எடுத்தியம்புகின்றார். தலைவன் தன் எண்ணம் நிறைவேறாத இடத்து மடலேற துணிவான் என்ற கூற்றுக்கு வலுசேர்ப்பதாக இக்குறள் அமைகின்றது.

**தலைவன் தன் குறை மறுக்கப்பட்ட சூழல்**

தலைவன் தலைவியைப் பிரிய முற்படுகையில் அதை விரும்பாத தலைவன் தலைவியை எங்ஙனமேனும் கூட வேண்டும் என்ற தனது தீர்க்கமான முடிவைத் தலைவியின் மீது திணிக்கின்றான். தலைவியானவள் தலைவனை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கின்றாள். தலைவன் தனது மனஅழுத்தத்தின் உச்சகட்டமாக சாவுஇச்சை என்ற கோட்பாட்டை கையில் எடுக்கின்றான். இறத்தல் என்ற உணர்வு மனிதனின் ஏமாற்றத்தின் விழைவு ஆகும். தலைவன் தனது எண்ணத்தை தலைவியின் மீது திணிக்க முற்படுவான். திணிக்கும் பொழுது தலைவனின் சாவுஇச்சை மற்றும் தலைவனின் அவமானத்தை முன்நிறுத்தப்படுகின்றது. மடலேறுதல் தலைவன் பிறழ்பட்ட நிலையில் நடக்கும் உளக்கோளாறுகளின் எதிரொலிகளாகவே உள்ளது. தலைவியை எய்தும் நோக்கம் தடைபடும்போது தலைவனுக்கு மனமுறிவு ஏற்படுகின்றது. எனினும் எப்படியும் தனது நோக்கினை நிறைவேற்ற மடலேறுதல் ஊக்கத்தினை அடைகின்றான். இந்த ஊக்கமும் நோக்கமும் மோதுகின்ற நிலையில் உளப்போராட்டத்திற்குத் தலைவன் உட்படுகிறான். இவ்வுள்ளப் போராட்டம் தீவிர முயற்சியும் வலுவும் அடையும் போது பிறழ்பட்ட மனோநிலையை தலைவன் பெற்று, சாகவும் துணிகின்றான். மடலேறுதல் முழுதும் தலைவன் கூற்றுகளாக உள்ளன. மேலும் அப்பாடல்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பது அதைச் சமூக வழக்களாக மக்கள் எண்ணியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு மனிதன் வாழ்வில் தனக்கு ஏற்ற பொருத்தப்பாட்டுடன்தான் வாழ முற்படுவான். பொருத்தப்பாடின்மை வரும் போது அம்மனிதன் பல சிக்கல்களுக்கு ஆளாகின்றான். இச்சிக்கலை உளவியலார் மனமுறிவு, போராட்டம், அழுத்தம் என மூவகையாகப் பிரிப்பர். இதற்குள் “மனமுறிவு என்பது விரும்பிய பொருளை அடைவதில் தடைகள் ஏற்படும் போது நிகழும் என்பர். மேலும் மனமுறிவுகள் ஏற்படுவதற்கு அகவய, புறவய அனுபவங்கள் அல்லது சூழல்களே காரணங்களாக இருக்கின்றன என்பார் ஜேம்ஸ் கோலமேன்.”[7]

தலைவன் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்த தலைவி மறுப்பை ஏற்க முடியாமல் மனமுறிவுக்கு ஆளாகி மனப்போபராட்டத்தை அடைய முற்படுகின்றான்.

**“நல்லாள் கணவன் இவன் எனப்**
**புல்லோர் கூற யாஅம் நாணுகம் சிறிதே”[8]**

தலைவன் இவ்விடம் தலைவியை அடைவதற்காக ஒரேவழி மடலேறுதல் மட்டுமே என்பதை உணர்கின்றான். “நல்லோள்” என்ற சொல் பெண்ணை இகழ்ச்சிக் குறிப்பாக சொல்லப்படுகின்றது. தலைவியைத் தலைவன் அடைந்தே தீருவேன்

என்ற உளப்பாடு கொண்டவுடன், முதலில் மனைவியாகப் பாவித்து முன்னரே கூறுவது போன்று பாநலம் பாராட்டல் என்பது நிகழும். புகழ்ச்சிக்கு மயங்காதவர் யாருமில்லை. புகழ்ச்சி மனிதனை உற்சாகமூட்டக் கூடியதாக அமையும். தலைவனும் தலைவியிடம் காரியம் ஆக வேண்டும் என எண்ணினால் பாநலம் பாராட்டுவான். இல்லையேல் தன் சாவு இச்சையைக் காட்டுவான். இதுவே தலைவன் கைளாளும் மிக சிறந்த உளவியல் உத்தி முறை ஆகும்.

மடல்மா ஏறுதல் என விளிக்கும் இடத்து தன் காதலி அல்லது மனைவி இவள் தான் என சபையோரிடம் மெய்ப்பித்துக் காட்டுவான். வேறு வழியன்றி தலைவியும் வெட்கி தலைகுணிவாள் என நம்புகின்றான் தலைவன். தன்னை ஏற்காத தலைவியை எங்ஙனமேனும் பெறும் முயற்சியின் விளைவாகவே மடலேறுதல் நிகழ்கின்றது. மனமுறிவிற்கு ஆட்பட்ட ஆணின் மனமானது மடலேறுதலையை ஏற்கும். “உளவியலார் தடைகளுக்குரிய காரணங்களுள் ஒன்றாக தற்கட்டுப்பாடின்மையை (Lack of self control) குறிப்பிடுவர். மனமுறிவு தாக்கும் மனப்பான்மைக்கு வழிவகுக்கும். மனிதனையோ பொருளையோ கோபம் கொண்டு தாக்கும் உணர்ச்சி, மனமுறிவிலிருந்து தான் தோன்றுகின்றது என்பர்.”[9]

**“அமிழ் துபொதி செந்தா அஞ்ச வந்த வார்ந்து இலங்கு வையெயிற்றுச் சில்மொழி அரிவையை”[10]**

தொல்கபிலரின் அழகான பாடல் வரிகள் இவை. ஆண் ஆசிரியனின் உளவியல் சார்ந்து அமைகின்றது என்று கருத இடமுண்டு. ஆண் பெற முடியாத ஒன்றை பெற்றே தீருவேன் என மடமைக் கொண்டு, மடலேறுதல் என்ற ஒன்றைத் தேர்ந்தெடுப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இவ்விடம் ஆண் ஆணிற்கான உளப்பாங்கினை பெற வேண்டும் என்றால் எப்படியேனும் பெற்றாக வேண்டும் என்ற உளப்பாங்கில் குறியாக உள்ளான். பெண் என்பவள் தன் உடலை அவனுடன் பகிர விரும்பாதபோது எப்படியேனும் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் நலம் பாராட்டி, பின்பு உனக்கு இழிவு ஏற்படும் என்று கூறிப் பின்னர், தன்னுடனானவள், தன்னுடைமையாக்கத்தினை, இங்கே பதிவு செய்கின்றான். மனமுறிவினுடைய உச்சம் தன்னை தானே தாக்கிக் கொள்ளுதல் என்ற நிலையில் தலைவன் செயல்படுகின்றான்.

மடலேறுதல் பாடல்களுக்கு மறு பாடல்கள் ஏதும் இலக்கியங்கள் கொடுக்கப்படவில்லை. மடலேறியது போன்ற எந்தப் பாடல்களும் குறுந்தொகையில் இடம்பெறவும் இல்லை. மடலேறுவேன் என்று உரைக்கும் பாடல்களே அதிகம். பெண்ணை கொவ்வை இதழுடையவள், செறிய பற்களை உடையவள் என்றே தலைவன் முதலில் இற்செறிக்கின்றாள். தலைவனின் இத்தகைய மனோபாவம் “மனஅழுத்தத்தின்” சாவுஇச்சை என ஃபிராய்டின் கோட்பாட்டுகள் வழி அறிய முடிகின்றது.

**“மாஎன மடலும் ஊர்ப எனக் குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப”[11]**

பேரையில் முறுவலள் அவர்களின் குறிஞ்சித் திணைப் பாடல் இவை. மடலேறுதலின் முறைகளை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. ஆண் ஆசிரியரின் பாடல்களே இவை. மடலேறுதல் பெண்பால் ஆசிரியர்களின் பாடல்கள் இல்லை. ஆணின் மனோபாவம் பாடல் ஆசிரியரின் மனோபாங்கிலும் வெளிப்படுகின்றது. சங்கப்பாடல்கள் சங்க கால மக்களின் மனஉளவியல் நூல், வாழ்வியலின் பிரதிபலிப்பு. மக்களின் வாழ்வியலை பாடல்கள் மூலம் அறியலாம். தோழி தலைவனுக்கு உதவி செய்யாமற் போக தலைவன் தலைவியை அடைந்தே

திருவேன் என்ற சாவுஇச்சைக் கோட்பாடு செயல்படுகின்றது. இன்றைய பல திரைப்பட காட்சிகளிலும் கூட பெண்ணின் காதலை விருப்பத்தை பெற தான் இறக்கப்போவதாக மட்டுமே இச்செறிப்பான்.

**“மறுகின் ஆர்க்கவும் மடுப**
**பிறிதும் ஆகுப - காமம் பாழ்க் கொளினே”[12]**

காமம் காழ்கொளின் - காமமாகிய நச்சு மரத்தின் முற்றிய பரவலான விதைகளை உட்கொண்டால் எனவும் பொருள்படும். ஊமத்தின் விதையினை உட்கொண்டால் அறிவு பித்தாவதுப்போல் காதலின் கழை உட்கொண்டவருக்கு பித்தாவர் என்பதாம். காமத்தின் முற்றியநிலை கிடைக்கப் பெறாமல் போகும் போது சாவு இச்சையின் இறுதிக்கட்டம் தன்னிலை மறந்து பித்ததாகும் நிலை. அந்நிலையில் தலைவன் தன் உடல்சார் தேவையே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. தலைவி தன்னுடன் இணையவேண்டும் என்பதனையே அவன் மூலமாகக் கொள்கின்றான். பெண்ணிடம் கடைசி முயற்சியாக சாதல் உணர்வு ஆயுதம் பலன் தரக்கூடியதே என்பதை உணர்ந்தே, அவன் இறப்பினும் என் தலைவியை அடைந்தே விட்டே இறப்பேன். “நெருப்பு என்றால் சுட்டுவிடுவது இல்லை அல்லவா?”தலைவனும் அத்தகைய கோட்பாட்டின் வழியிலேயே செயல்படுகின்றான். காமத்தின் மிகுதியால் மடலேறுதல் நிகழும். தான் என்ன செய்யவேண்டும் என்று அறியாத, சிந்திக்க திறனில்லாத ஒருமாறுபட்ட நடைத்தைக்கு வழிவகுக்கும். இதை உளவியலில் நனவிலி சிதைவு (Dissociation of Consciousness) என்பர். தலைவன் தன் நனவின் திறனின்றியே தன்னிலை மறந்த நிலையில் செயல்படுகின்றான்.

## பிறழ்நிலை உளவியல்-தலைவனின் குறை மறுத்த வழி செயல்பாடு

மனிதனின் இயல்பான நடத்தையிலிருந்து மாறுபட்டு காணப்படும் நடத்தை பிறழ்நிலை உளவியலாகும். இம்மாறுபாடுகள் மரபுநிலை காரணமாகவும், சூழ்நிலை காரணமாகவும் அமையும் என்பார் சி.சிவராஜ்.

**“பொய்யே காமம்**
**மாஎன மடலொடு மறுகில் தோன்றி**
**தெற்றெனத் தூற்றலம் பழியே”[12]**

குறைமறுத்தவிடத்து தலைவன் தோழியிடம் மடல் ஏறியாவது பெற்றுவிடுவேன் என உரைக்கின்றான். மடலேறுவேன் என்று உரைப்பது பெண்ணிற்கு இழுக்கு என்பது போல உரைக்கின்றான். தலைவன் தன் மனநிலையில் மாறுபட்டவனாக பிறழ்நிலையில் உலறுகின்றான்.

**“பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப**
**இன்னள் செய்தது இதுஎன முன்நின்று**
**அவள்பழி நுவலும் இவ்வூர்”[14]**

தலைவன் ஊரார் முன்னின்று உரைப்பேன் என விளிக்கின்றான். குறை மறுத்த வழிப் பாடல்கள் மட்டுமே குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. தலைவி தன்னை ஏற்காத இடத்துத் தலைவன் செய்யும் குன்றிய மனநிலைச் செயல் மடலேறுதல் ஆகும்.

## தன் நெஞ்சிற்கு தானே உரைத்தல்

தலைவன் தன் நெஞ்சிற்கு தானேக் கூறிக் கொள்வதுப்போல் அமையும் பாடல் இவை. மனமுறிவின் ஒரு பகுதியாக தன்னைத் தானே தேற்றிக் கொள்ளுதல் நிகழும். அதன் வழி தலைவன் தன் நெஞ்சிற்கு

**“ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கித்**
**தெருவின் இயலவும் கொல்லோ”[15]**

தலைவி பெறுதலையே நோக்கமாகக் கொண்டவன். மடலேறி அவள் முன் நின்றாவது இறக்கத்தைப் பெற்று தலைவியைப் பெறுவேன் என உரைப்பதாக அமைகின்றது.

## தலைவனின் உடலியல் அரசியல்

தலைவன் தனக்குப் பிடித்த பெண்ணை அடைய தன் மனதிலும் இதே போன்ற எண்ணத்தை கைக்கொள்கின்றான். தனக்குப்

பிடித்த பெண்ணை அடைய மனதில் உறுதி கொள்கின்றான். தன்னிலையை மறக்கின்றான். தன்னுடைய உடைமைகளையும் பொருளையும் இழப்பதைக் காட்டிலும் தன்னைத் தானே இழைத்தல் என்பது இவ்விடம் ஒப்புநோக்கத்தக்கது. தன்னைத் தானே வற்புறுத்தி அதன்வழியே தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்கின்றான். பெண்ணின் உணர்வுரீதியாக நோக்கும் இடத்துத் தன்னைப் பலவீனமானவனாகக் காட்டிக் கொள்வதினால் தலைவி தன்னை இணைய ஒப்புவாள் என்ற எண்ணம் தலைவனுக்கு தோன்றுகின்றது. தலைவியை உணர்வு மற்றும் செய்கைகளினால் தடைச் செய்ய முற்படுகின்றான் தலைவன்.

இன்றையக் காலக்கட்டத்தில் பெண்ணை வன்கொடுமைக்கு ஆளாக்குவது, முகத்தில் ஆசிட் அடிப்பது, தனக்குக் கிடைக்காத ஒரு பெண்ணை யாரும் அடையவிடாமல் செய்வது எனப் பல்வேறு கோணங்களில் இடையூறுகள் நிகழும். மடலேறுதல் இன்றைய விரும்பத்தகாத மாற்றங்கள் இரண்டிற்கும் பெருமளவு வித்தியாசம் ஒன்றுமில்லை. பெண்ணைக் குடும்பம் மற்றும் சமூகத்தின் அடையாளத்தினை மாற்றும் நோக்கில் பெண்ணை முன்னிறுத்தி வற்புறுத்தும் போக்கும் நடைபெறுகின்றது.

## முடிவுரை

விரும்பமில்லாத பெண்ணை மணக்க செய்யும் செயல் ஒருவகையான வன்புணர்ச்சியே ஆகும். தன் பெயரைப் பிறர் விரும்பமில்லாமல் பயன்படுத்துவது சமூகத்தில் பெண்ணின் இருப்பு நிலையைக் காட்டுவதாக அமையும்.பெண்ணிற்கு இழைக்கப்படும் மிகப்பெரிய உரிமை மறுப்பு நிலை ஆகும். பிறழ்நிலைக்கு ஆட்பட்ட ஆணின் மனமானது பல்வேறு சிந்தனைகளை அடக்கியதாக அமைக்கக் கூடியதே ஆகும். பெண்ணைப் பரிசுப் பொருளாகவும், பணயப் பொருளாகவும், விற்பனைப் பொருளாகவும் மட்டுமே எண்ணி இருந்தனர். பெண்ணின் இருப்பு நிலை என்பது ஆணிற்கு நிகரானதாக அமையவில்லை. பெண்களுக்கு இழைக்கப்படும் உரிமை மீறல் போகிற போக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மடலேறுதல் பெருந்திணைக்குரியதாகக் கருதப்பட்டாலும் இலக்கியங்களில் அத்தகைய பதிவுகள் பெருமளவு காணப்படவில்லை.

## குறிப்புகள்

1. தொல். அகத். 54
2. தொல். அகத். 54
3. தொல். களவியல் 99
4. தொல். களவியல் 7
5. திருக்குறள் 1133
6. திருக்குறள் 1134
7. James C.Colamam, Psychology and effective behavior. P.176
8. குறுந். பா.14 வரி 5-6
9. மு. ராசமாணிக்கம், உளவியல் துறைகள் - II Vol P-323
10. குறுந். பா.14 வரி 1-2
11. குறுந். பா.17 வரி 1-2
12. குறுந். பா.17 வரி 3-4
13. குறுந். பா.32 வரி 3-5
14. குறுந். பா.173 வரி 4-6
15. குறுந். பா.182 வரி 4-5